**தலைப்பு 119– மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தம்பர் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்வலு மற்றும் எரிசக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும்

மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நி.பி. 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக |
| (ஆ) | கடன்தொகைக்காக பிணையாளர்கள் முன்வரும் சந்தர்ப்பத்தில் குறித்த பிணையாளர்கள் பிணையாளியாக இருப்பதற்கு உள்ள இயலுமையைத் தீர்மானிப்பதற்காக பிணை பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் பிணைப் பதிவேடொன்று பேணப்படவில்லை | பிணை பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு முதல் பிணை பதிவேடொன்று பேணிச்செல்லப்படுவதாக |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

அமைச்சின் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது | பொது மக்களுக்கு வழங்கும் சேவைகள் மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாக சுற்றறிக்கை | வழங்குவதற்கு தேவையான பின்னணியை தயாரித்தல் அமைச்சிற்காக பிரஜை/சேவை நாடுனர் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | | |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரைவு தயாரிக்கப்பட்டுள்ள தாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 119-1-2-6-2506 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் நிதிஏற்பாடான ரூபா 140,000,000 தொகையில் ரூபா 84,183,986 அதாவது 60 சதவீதம் செயற்படுத்துவதில் தாமதம் மற்றும் கட்டுநிதி கிடைக்காமை அடிப்படையில் சேமிக்கப்பட்டிருந்தமை அடிப்படையில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 119-2-7-1-1503 ஆம் இலக்க செலவின விடயத்தின் நிதிஏற்பாட்டுத் தொகையான ரூபா 120,000,000 தொகையில் ரூபா 16,630,332 அதாவது 14 சதவீத கட்டுநிதி விடுவிக்கப்படாமை காரணமாக சேமிக்கப்பட்டிருந்தது.. | மீளாய்வாண்டின் இறுதி வரை தாமதிக்காமல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

## 2.2 செலவின முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நிதி ஏற்பாடு சேமிப்பு 5 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சில் பரம்பியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட துடன் 22 செலவின விடயங்களுக்குரிய அவ்வாறு சேமிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 220,104,490 ஆக இருந்தது. புதிய கட்டிடத்திற்காக ரூபா 200 மில்லியன் குத்தகை உடன்படிக்கைக்கு இணக்கப்பாடு கிடைக்காமை இந் நிதிஏற்பாடு சேமிப்பிற்கு அடிப்படை காரணமாக இருந்ததாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடு சரியாக மதிப்பீடு செய்தல் மற்றும் பயன்பாடு முறைப்படுத்தப்பட வேண்டும். | அமைச்சு புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்காக அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் புதிய கட்டிடத்திற்குரிய குத்தகை உடன்படிக்கை வருவதற்கு வர முடியாதிருந்தது. ஆதலால் இந்த ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதனை செயற்படுத்தும் தாமதங்கள் அல்லது மதிப்பீடு செய்வதில் பலவீனங்களாக அறிக்கையிடுவது தொடர்பாக இணங்க முடியாதிருந்தது. |
| (ஆ) | மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நிதி ஏற்பாடு சேமிப்பு 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் பரம்பியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட துடன் 05 செலவின விடயங்களுக்குரிய அவ்வாறு சேமிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 98,365,119 ஆக இருந்தது. இதற்காக மதிப்பீடு செய்வதில் பலவீனங்கள் மற்றும் செயற்படுத்து வதில் தாமதங்கள் காரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

| | | |
|---|---|---|
| (இ) ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தால் செலவிடப்பட்டிருந்த நேரடிச் செலவினம் கணக்கீடு செய்யாமை காரணமாக செலவின விடய இலக்கம் 119-2-7-11-2506(13) மற்றும் 119-2-7-10-2506(13) இன் கீழான இரண்டு ரூபா 14,371,755 சேமிப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு செயற்திட்டங்கள் தொடர்பாக நேரடி செலவினம் கணக்கீடு செய்யும் நடைமுறையை முறைப்படுத்துதல் . | உரிய செயற்திட்ட அலுவலகங்கள் ஊடாக அமைச்சிற்கு அறிக்கையிட்டுள்ள செலவனம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் குறிப்பான தினமொன்றில் ஒரு செலவின விடயமொன்றுக்கான கடப்பாடு அளவினை இனங்காண்பதற்காக ஒவ்வொரு செலவின அலகினாலும் நாளாந்தம் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை www.newcigas.treasury.gov.lk இணையத்தளத்திற்கு பதிவேற்ற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தகவல் முறைமையை நாளாந்தம் நாளதுவரையாக்குதல் வேண்டும் | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

அமைச்சின் கீழ் உள்ள பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 மெ.வொ. மொறகொல்ல நீர் மின்நிலைய நிர்மாணம் | | |
| | 31 மெகா வொட் இயலளவுடனான தேசிய மின் முறைமைக்கு பெற்றுக் கொள்வதற்காக செயற்படுத்தப்படும் மொறகொல்ல நீர் மின்நிலைய நிர்மாணத்திற்கு உரிய செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 3 ஆண்டு கால தாமதத்துடன் இதன் வேலைத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கயிடமிருந்து ரூபா 16,780 மில்லியன் தொகை கிடைத்திருந்ததுடன் இச்செயற்திட்டம் குறிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு ஆரம்பிக்கப்படாமை காரணமாக பெற்றுக்கொண்ட கடன் தொகைக்காக ரூபா 28 மில்லியனிக்கு அண்மித்த தொகையொன்று (USD177,931) தண்டப்பணமாக) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பௌதீக முன்னேற்றம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 சதவீதமாக இருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை நிறைவேற்றம் வகையில் திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட்டு குறித்த கால சட்டகத்தில் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 24 சதவீதம் என சரிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய கோபுர மற்றும் விநியோக வலய அபிவிருத்தி மற்றும் மின்சக்தி செயற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| | இச்செயற்திட்டம் 2015 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதம் முடிவடைவதற்குள் முன்னர் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23,720 மில்லியனாக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை | - மேற்படி - | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் ரூபா 3,488 மில்லியனாக இருந்தது. பௌதீக முன்னேற்றம் 2 சதவீதமாக இருந்தது. | | |
| (இ) | 35 மொ.வொ புரொடலன்ஸ் நீர் மின் நிலைய செயற்திட்டம்<br>---------------------------------------------------------------<br>இச்செயற்திட்டம் 2013 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,424 மில்லியனாக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவினம் ரூபா 6,426 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் 74 சதவீதமாக இருந்தது. | - மேற்படி - | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற் திட்டத்தின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 9,385 மில்லியனாக இருக்க வேண்டுமென |

## 3.2 அரச உத்தியோகத்தர்களின் பிணை

-------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் ஆட்களும் தனது கடமையை நேர்மையாக நிறைவேற்ற வேண்டுமென 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டும். மேலும் நிதிப் பிரமாணம் 881 இன் பிரகாரம் உத்தியோகத்தரொருவர் அவ்வாறான பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்க வேண்டும். | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாறான பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்கப்பட வேண்டும். | அமைச்சின் உத்தியோகத்தர்கள் பிணை வைப்பது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரம் 4 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர்களால் பிணை வைப்பதற்காக பிணை முறி பத்திரங்கள் எடுப்பதற்கு ஒரு உத்தியோகத்தரால் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் அரச சேவைகள் பரஸ்பர பிணை முறி சங்கத்திற்கு 2020.09.24 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 மே 12 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட அமைச்சின் HE-2381 ஆம் இலக்க வாகனத்தின் வபத்து தொடர்பான ரூபா 251,334 ஆன நட்டத் தொகையை நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறித்த தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நட்டங்களை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | இலங்கை மின்சார சபை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் சட்டரீதியான சிக்கல்களை சீர் செய்து வருவதுடன் அதன் தற்போதய நிலைமை இலங்கை மின்சார சபையிடமிருந்து கேட்டு விசாரித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை பதவியணியில் 25 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அமைச்சினை செயற்திறனாக பேணிச் செல்வதற்காக அத்தியவசியமான மேலதிக செயலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) பணிப்பாளர் (திட்டமிடல் நிர்வாக உத்தியோகத்தர உட்பட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களாக உள்ள பதவிகளுக்காக விரைவில் உத்தியோகத்தர்களை இணைத்துக்கெ காள்வது தொடர்பாக அவ்வப்போது பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரை அமைச்சின் அங்கீகரிக்கப்பட் பதவியணியினலிருந்து விலகி இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 27 உத்தியோகத்தர்கள் அமைச்சின் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் சில உத்தியோகத்தர்கள் 2006 ஆம் ஆண்டு முதல் அமைச்சிற்கு | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ'12 ஆம் இலக்கு பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னிணைப்பு ஒன்ற மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |